முருகப்பெருமான் துணை

**மகான் அருள்நந்தி சிவாச்சாரியார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.09.2022**, திங்கட்கிழமை

1. உள்ளடங்கும் சோதிநிலை கண்டு
உனக்குள்ளே தயவை பெருக்கி
கள்ளமிலா தரும சேவை ஆற்றி
கந்தப் பெருமானை வணங்கிவர
2. வருகவே அகஜோதி ஆனந்தமாக
வரம் கூடி ஞான ஒளியாகுமென
குருவரங்கன் மலரடி போற்றி
கூறுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை சுபகிருது தரிவை திங்கள்
அறிவிக்க நவ திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் **09**ம் நாள், **26.09.2022** திங்கட்கிழமை)
ஆசிதனை அருள்நந்திசிவாச்சாரியார் யானும்
அகிலத்தார் அரங்கமகான் வழிதனில்
4. வழிதனில் ஞானம் பெற உரைப்பேன்
வணங்கி அரங்கன் திருவடியே
அழியாமைதரும் ஞானத்திருவடியென
அனைவரும் ஏற்றுப் பற்றி வர
5. வருகவே மக்களுள் தேற்றம்
வரமாக ஞானமாகக் கூடி
தருமபலமாகி தரணியெங்கிலும்
தவராஜன் தவமாக நிரம்பி
6. நிரம்பி எங்கும் எவற்றிலும்
நிலைத்திடும் அரங்கர் மயம்
நிரம்பியே மக்களெல்லாம் தேறி
நிலவுலகில் ஞானவான்கள் படை
7. படைகள் பெருகி இனிதே
பாடிடுவேன் ஞானவான்கள் தலைமை
தடையற அமைதல் கண்டு
தரணியோ பாதுகாப்பு காண்கும்
8. காண்குமிந்த அற்புதம் தன்னை
கலியினில் அரங்கன் நடத்த
ஆன்மீக சன்மார்க்கமெனும்
அறம் வழியை தேர்வு செய்து
9. செய்துமே அனுகூலம் பெற
செகத்தில் சேவையாக அருளிவர
அய்யமின்றி ஏற்கும் மக்கள்
ஆனந்த ஞான வாழ்வு தன்னை

10. தன்னையே அரங்கன் காட்டும்
தவ வழியில் அடைதல் கண்டு
அன்னதான சேவை துவக்கிட
ஆற்றலாக இன்னும் பலவரம்

11. வரம் பெற்று ஞானி ஆவர்
வடிவேலனார் அருட்காட்சி
வரம் கிட்டி பெரும் பேறடைவர்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–